**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 7.5.2012**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

அரசு நிர்வாகம் திறம்பட செயல்படும் வகையில், அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் தங்கள் செயல் திறனை மேம்படுத்திக் கொள்வதிலும்; அறிவுத் திறனை உயர்த்திக் கொள்வதிலும் இன்றியமையாப் பங்கினை வகிப்பவை பயிற்சி நிலையங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த அடிப்படையில், அரசு ஊழியர்களின் பணித் திறனை உயர்த்தும் வகையிலும், அலுவலக நடைமுறைகளை அவர்கள் தெரிந்து கொள்ளும் வண்ணமும்; அவர்களிடையே புத்துணர்ச்சியையும், நட்புறவையும், சகோதரத்துவத்தையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தும் வகையிலும்; அரசு ஊழியர்களுக்கான அடிப்படைப் பயிற்சி ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் குடியுரிமை பயிற்சி நிலையத்தில், அதாவது Civil Service Training Institute-ல் அளிக்கப்படுகிறது. இந்த நிலையத்தில் இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள் போன்ற அமைச்சுப் பணியாளர்களுக்கு பல்வேறு வகையான நிர்வாக செயல்முறைகளில் அடிப்படைப் பயிற்சியும்; துணை வட்டாட்சியர்களுக்கு பணியிடைப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இந்த பயிற்சி நிலையத்தில் உள்ள அரங்கம், வகுப்பறைகள், விடுதிக் கட்டடங்கள், உணவு அரங்கங்கள், பணியாளர் குடியிருப்புகள், பயிற்சியாளர் விடுதிகள், நூலகக் கட்டடம், துணை வட்டாட்சியர் தங்கும் விடுதிகள், அலுவலகக் கட்டடங்கள் ஆகிய அனைத்துமே பழுதடைந்து பயிற்சி அளிப்பதற்கு ஏதுவாக இல்லாத சூழ்நிலை உள்ளது.

அரசு ஊழியர்களுக்கான அடிப்படைப் பயிற்சியின் அவசியத்தை கருத்தில் கொண்டும்; பவானிசாகரில் உள்ள குடியுரிமை பயிற்சி நிலையத்தை சிறந்த பயிற்சி நிலையமாக உருவாக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தைக் கருத்தில் கொண்டும்; 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறைகள், நூலகம், உள் விளையாட்டு அரங்குகள், பதிவறைகள், ஆசிரியர்களுக்கான தனியறைகள், நிர்வாக அலுவலகத்திற்கான கட்டடம், காணொலி கண்காட்சி அரங்கம், தங்கும் விடுதிகள், பணிபுரிபவர்களுக்கான குடியிருப்புகள், நவீன உணவுக் கூடம், மருத்துவ மையம், விளையாட்டு அரங்கம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்ட பயிற்சி நிலையமாக பவானிசாகர் அரசு பயிற்சி நிலையம் மாற்றி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******